பக்கங்கள்: 09 விலை : 20/-

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 16 செவ்வாய்க்கிழமை 30.06.2020 கதிர் 105

# புலிகள் அமைப்பு மீளுருவாக்கம்? கிளிநொச்சியில் 22 பேர் கைது

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 30

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை மீள உருவாக்க முயன்றனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஆள்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாகக் கடந்த மாதம் கிளிநொச்சியில் 22 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2

## தபால் மூலம் வாக்களிக்க 24,829 பேர் யாழில் தகுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 30

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 24,829 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் தெரிவித்தார்.

2

## தபால் வாக்குச்சீட்டுகள் இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

2020 பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகள் விநியோக நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய இன்று, நாளை மற்றும் நாளை மறுதினமும் தபால் மூல வாக்குச் சீட்டுகள் விநியோக நடவடிக்கை இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறை தபால்மூல வாக்களிக்க 7 லட்சத்து 5 ஆயிரத்து 85 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை 14,15,16,17,20 மற்றும் 21ஆம் ஆகிய

2

## ரி.ஐ.டியினரால் இளைஞர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 30

முல்லைத்தீவில் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால், இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேப்பாபுலவைச் சேர்ந்த, நவரத்தினம் டிலக்சன் என்ற 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றிரவு அவரது வீட்டுக்குச் சென்ற பயங்கரவாதக் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினர், இந்த இளைஞனைக்

2

# புதியவர்களுக்கு வாய்ப்பளித்தால் நாடு முன்னேறும்!

## பழைய அரசியல்வாதிகளுக்கு சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை



இன்று அரசியலில் தலைமைத்துவம் வகிக்கும் அனைவரும் ஓய்வு பெற்று புதிய நபர்களுக்குப் பதவிகளில் அமர இடமளித்தால் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

2

## சூறாவளிப் பிரசாரத்துக்கு வடக்கு வருகின்றார் சஜித்



யாழ்ப்பாணம், ஜூன் 30

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அடுத்த 3 நாள்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் முகாமிட்டு தொடர் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.

நாளை சாவகச்சேரியில் பிற்பகல் 2 மணிக்கு முதலாவது பிரசாரக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்கிறார். அதைத் தொடர்ந்து, யாழ் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, கோப்பாய் செல்வமஹால் மண்டபம், தாவடி வேலுவிநாயகர் விளையாட்டுக் கழகம் ஆகிய இடங்களில் அவரின் பிரசாரக் கூட்டங்கள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து, 2ஆம் திகதி - வட்டுக்கோட்டை வழுக்கம்பரை அம்மன் கல்யாண மண்டபம், மானிப்பாய் பிரதேசசபை மண்டபம், சாவற்காடு மகாத்மா சனசமூக நிலையம், காங்கேசன் துறை இராஜேஸ்வரி மண்டபம், உடுப்பிட்டி சித்திவிநாயகர் கல்யாண மண்டபம்,

2

## அலுவலக நேரங்களில் விரைவில் மாற்றங்கள்

கொழும்பு, ஜூன் 30

அலுவலக நேரங்கள் ஆரம்பிப்பதில் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என அலுவலக நேரங்களில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழு யோசனை முன்வைத்துள்ளது.

இது தொடர்பான பரிந்துரை அடங்கிய அறிக்கையை இன்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளிக்கவுள்ளதாக அந்தக் குழுவின் தலைவர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அந்த அறிக்கையை ஆராய்ந்த தன் பின்னர் அது அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் குழுவின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

2

## கொரோனாவை அடுத்து தலைதூக்கும் மலேரியா!

கொழும்பு, ஜூன் 30

இலங்கையில் கொரோனா வைரஸ்கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மலேரியா நோய் தலைதூக்கியுள்ளதாகச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரத்தில் 3 மலேரியா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

2

## தேர்தல் முதலாவது முடிவு ஓக. 6 மாலை 4 மணிக்கே!

கொழும்பு, ஜூன் 30

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் முதலாவது உத்தியோக பூர்வ முடிவு ஓகஸ்ட் 6ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு வெளியிடப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

2

## ஏழு மாதங்களில் இராணுவ மயம்!

### இதுவே கோட்டா அரசின் சாதனை என்று சாடுகின்றார் ரங்கே பண்டார

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு பதவியேற்று சுமார் ஏழு மாதங்கள் கடந்திருக்கின்றன. எனினும், முழு நாட்டையும் இராணுவ மயமாக்கியதைத் தவிர வேறெதையும் இந்த அரசு செய்யவில்லை.

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கொரோனாவை அடுத்து ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 13 மலேரியா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பதிவாகிய மலேரியா நோயாளிகள் மூவரில் ஒருவர் தம்புள்ளை - பெல்வெஹெர தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இரத்திபுரிப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த நபர் மடகஸ்கார் நாட்டில் இருந்து இலங்கை வந்து தனிமைப்படுத்தப்பட்டவராவார். அவர் தற்போது தம்புள்ளை வைத்தியசாலையில் தனி அறையில் வைக்கப்பட்டுள்ளார் என மலேரியா தடுப்புப் பிரிவினர் இயக்குநர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

மற்றைய மலேரியா நோயாளிகளில் இருவரும் இந்தியாவின் தம்பதிவ யாத்திரைக்குச் சென்று திரும்பியவர்களாவர். அவர்கள் இவ்வாறு நாடு திரும்பி 10 மாதங்களின் பின்னர் மலேரியா தொற்றியமை உறுதியாகியுள்ளது.

அவர்கள் இருவரும் இரத்தினபுரி - கலவான மற்றும் மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

மலேரியாவை முற்றாக ஒழித்த நாடாக இலங்கையை, ஐக்கிய நாடுகளின் சுகாதார பிரிவு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அலுவலக நேரங்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் அதிகாரிகள் அடங்குகின்றனர்.

## தேர்தல் முதலாவது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரி விக்கையில் -

2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் எண்ணும் நடவடிக்கை ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படும். அதனடிப்படையில் முதலாவது தேர்தல் முடிவு 6 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வழங்கப்படும் - என்றார்.

பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏழு மாதங்களில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார குற்றஞ்சாட்டினார்.

இறுதியாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் பொருளாதாரத்தை சீரமைப்பதற்கும் இராணுவ அதிகாரிகளை நியமிப்பது மாத்திரமே எஞ்சியிருக்கின்றது. இந்த நிலை தொடருமாக இருந்தால் அரச நிர்வாக சேவைப் பரீட்சை எழுதித் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உரிய அங்கீகாரம் இல்லாமல் போய்விடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நவீன யுகத்துக்கு ஏற்றவாறு தனது திறன்களால் நாட்டை நிர்வகிக்கக்கூடிய ஒரு தலைவர்தான் எமது தேவையேயன்றி, வெறும் வாய்வார்த்தை வீரத்தால் பயனில்லை.

தற்போது தேர்தலைப் பொறுத்தவரை தேர்தல்கள் ஆணைக்குழு ஆளுந்தரப்புக்கும் எதிர்த்தரப்புக்கும் பொதுவாக ஒரே விதமாகச் செயற்பட்டு வருகின்றது. நாங்கள் கொண்டுவந்த அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாகவே இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமானச் செயலாற்றக்கூடிய நிலையேற்பட்டது.

எனவே, உரிய சட்டதிட்டங்களைப் புறக்கணித்துத் தன்னிச்சையாகச் செயற்படுபவர்களை விடுத்து, சர்வதேச நாடுகளுடன் ஒன்றிணைந்து ஜனநாயக ரீதியாக செயலாற்றத்தக்க தரப்பினரையே இம்முறை தேர்தலில் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் - எனவும் அவர் வலியுறுத்தினார்.

## சூறாவளிப் பிரசாரத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜ கிராமம் - நெல்லியடி, பருத்தித்துறை, ஊர் காவற்றுறை அனுசா கல்யாண மண்டபம் ஆகிய இடங்களில் நடக்கும் பிரசார கூட் டங்களில் கலந்து கொள்வார். 3ஆம் திகதி கிளிநொச்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடக்கும் பிரசாரக் கூட்டத்தில் அவர் கலந்துகொள்வார்.

## புதியவர்களுக்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது 75ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஹொரவபொத்தானை பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

என்னைப் பலவந்தமாக அரசியலுக்கு அழைத்து வந்தனர். ஆனால் ஐந்து வருடங்களுக்குள் இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் நாடாளுமன்றில் உள்ள 225 பேரில் அதிகமானவர்களால் நாட்டை முன்னேற்ற முடியாது என்பதை நான் தெரிந்து கொண்டேன். இவர்கள் அனைவருக்கும் முடியாது. ஒவ்வொருவரும் தங்களை முன்னேற்றி பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக உள்ளனர்.

அதனால் இவ்வாறான நபர்களுடன் இணைந்து அரசியல் செய்ய நான் விரும்பவில்லை. ஜனாதிபதி பதவியில் இருந்து வீட்டுக்குச் சென்றாலும் மீண்டும் மீண்டும் ஜனாதிபதியாக, மீண்டும் மீண்டும் பிரதமராக எனக்கு அதிகார மோகம் கிடையாது. சர்வ பலம் கொண்ட ஜனாதிபதியாக இருந்துவிட்டு வெறும் நடாளுமன்ற உறுப்பினராக கேவலப்பட்டு நாடாளுமன்றம் செல்ல எனக்குத் தேவையில்லை.

இன்று அரசியல் தலைவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்கள் ஓய்வுபெற்று வீட்டிற்குச் செல்ல வேண்டும். இங்கே இருமிக் கொண்டு சுகயீனத்துடன் இந்த அரசியலைச் செய்வதைவிட புதிதாக வருபவர்களுக்குப் பதவிகளைப் பெற வாய்ப்பளித்தால் நாட்டை முன்னேற்ற முடியும் - என்றார்.

## தபால் வாக்குச்சீட்டுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைக்கூலிகளுக்கு வாக்களிக்க வேண்டாம்!

## இரா.துரைரெத்தினம் வேண்டுகோள்



மட்டக்களப்பு, ஜூன் 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் நான்கு தமிழ் பிரதிநிதிகளை பெறவேண்டுமாயின் தமிழ் வாக்குகளைப் பிரிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகின்ற கைக்கூலிகளுக்கு வாக்களிக்கக் கூடாதென முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் நிலமைகள் தொடர்பாக அவர் இன்று (செவ்வாய்க்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு :-

தமிழர்கள் வாழுகின்ற பிரதேசம் பௌத்த பிரதேசம் எனவும், எமது சமூகத்தை நிர்வகிப்பதற்கு பௌத்த நிர்வாகத்தை ஆளுமைப்படுத்த முயல்வதும், அதிகார பங்கீடு தொடர்பாக எச்சரிப்பதும், எதிர்காலத்தில் தமிழர்களை அடிமைகளாக வாழ வைக்கும் திட்டமாகும்.

இத்திட்டங்களை முறியடிப்பதற்கு தமிழர் பிரதிநிதித்துவம் அவசியமாகும். இப் பிரதிநிதிகளை குறைப்பதன் ஊடாக எம்மைப் பலவீனப்படுத்தவதற்கு இம் மாவட்டத்தில் பல குழுக்களுக்கு நிதிகளை வழங்கி பல குழுக்களை தேர்தல் களத்தில் இறக்கியுள்ளனர்.

குறிப்பாக, அற்பசொற்ப வாக்குகளை எடுக்கக் கூடிய பல குழுக்கள் தேர்தலில் இறங்கி எழுபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பல கூறுகளாகப் பிரித்து நான்காவது தமிழ் பிரதிநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வரக்கூடிய வாய்ப்புகளை இல்லாமல் செய்து, ஐந்து பிரதிநிதிகளில் இரண்டு பிரதிநிதிகளை மாற்றுச் சமூகத்திற்கு வழங்கக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்துகின்றனர்.

இதை வலுச்சேர்ப்பதற்கு மத்தியிலுள்ள இனவாதிகள் பலகோடிக் கணக்கான நிதியை வழங்கி தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்குவதற்கு சதித்திட்டம் தீட்டியுள்ளனர்.

இதை முறியடிப்பதற்கு உதிரிகளாக தேர்தல் களத்தில் குதித்துள்ளவர்களுக்கு வாக்களிப்பதை நிறுத்தி நான்காவது ஆசனத்தையும் பெறக் கூடிய தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற ஒரு லட்சத்து இருபத்தேழாயிரம் வாக்குகளுடன் சேர்த்து மேலதிகமாக எழாயிரம் வாக்குகள் அளிக்கும் பட்சத்தில் நான்கு தமிழ் பிரதிநிதிகளைப் பெற முடியும்.

ஒரேயொரு ஆசனம் ஏனைய சமூகத்தின் விதாசாரத்திற்கு ஏற்றவாறு செல்லும். ஒரு தமிழ்ப் பிரதிநிதியைப் பெறுவதற்கான நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை எந்தக் கைக்கூலிகளும் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

எனவே கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெற்ற வாக்குகளுடன் மேலதிகமாக ஏழாயிரம் வாக்குகளை தமிழ் மக்கள் அளிக்கும் பட்சத்தில் நான்கு தமிழ் பிரதிநிதிகளை பெற்ற பெருமையை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களைச் சென்றடையும். அந்த வெற்றி தமிழர்களுக்கான வெற்றியாக அமையும்.

மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு நாம் தெரிவு செய்யும் நான்கு தமிழ் பிரதிநிதிகளையும் தமிழ்த் தேசிய இருப்பை உறுதிப்படுத்தி, அதிகாரம் உள்ள பிரதிநிதிகளாக மாற்றுவதற்கு உருவாகப்படப் போகின்ற அரசுடன் பேச்சில் ஈடுபட வேண்டும்.

இத்தேர்தலின் பெறுபேறுகளே எதிர்காலத் தமிழர்களின் இருப்பை பாதுகாக்கும் என்பதை ஒவ்வொரு தமிழ் வாக்காளப் பெரும் மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழர்கள் பிரதிநிதிகளாக வருவதை இல்லாமல் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்ற உதிரிகள் இத்தேர்தலில் இருந்து தமிழர்களின் வாக்குகளைப் பிரிக்காமல் ஒதுங்கிக் கொள்வது எமது சமூகத்திற்கு நாம் செய்யும் நன்மையாகும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ரி.ஐ.டியினரால் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்வதற்கான ஆவணத்தை வழங்கி, கைது செய்து விசாரணைக்காக அழைத்து சென்றனர்.

## தபால் மூலம் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காகத் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பொதியிடும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

யாழ்.மாவட்டத்தில் 21,239 அஞ்சல் வாக்காளர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பொதியிடும் பணி நடைபெற்று வருகின்றது. அதேபோல் கிளிநொச்சிமாவட்டத்தில் 3,590 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்குச் சீட்டுக்கள் பொதியிடும் பணிகள் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை 22 நிலையங்களில் பொதியிடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு பொதியிடப்பட்ட ஆவணங்கள் நாளை முதல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப் பெறும். எனவே நாளை முதல் கிடைக்கப் பெறும் பொதிகள் தொடர்பாக அவர்கள் மேலதிக நடவடிக் கையை மேற்கொள்வார்கள்.

எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான வாக்களிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 14ஆம்,15ஆம் திகதிகளில் ஏனைய அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான அஞ்சல் வாக்களிப்பு இடம்பெறும். 16ஆம்,17ஆம் திகதிகளில் மாவட்ட செயலகம், முப்படையினர், பொலிஸாருக்கான தபால் மூல வாக்களிப்பு இடம்பெறும் - என்றார்.

## புலிகள் அமைப்பு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை மீள உருவாக்க முயற்சிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் மட்டும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளமையோடு மாதம் முழுமையாக 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என உறவுகளால் முறையிடப்பட்டுள்ளது. அனைவரும் ஒரே குற்றச் சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டனர் என ஜூன் மாதத்தில் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 பேரில் ஒருவர் 17 வயதுச் சிறுவன் என பெற்றோரினால் பிறப்புச் சான்றிதழ் ஆதாரத்துடன் மனித உரிமை ஆணைக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட எவர் தொடர்பிலும் இதுவரை எந்த நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பேரினவாதச் சாகரத்தில் மூழ்கிக் கிடக்கும் இலங்கை

இலங்கையில் சிலர் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் செய்ததை போலவே தற்போது பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போதும் இனவெறியைத் தூண்ட முயற்சிக்கின்றனர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

'சிலர்' என்று குறிப்பிடுவதை விடுத்துப் 'பெரும்பாலானோர்' என்று கூறியிருந்தால் அது மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

இலங்கையில் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் இதற்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றமை போன்று இனவாதம் மட்டுமே பிரதான பேசு பொருளாகி இருக்கின்றது.

தனியாக சிங்கள, பௌத்த வாக்குகளினால் மட்டுமே நான் ஜனாதிபதியானேன் என்று கடந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவில் வெற்றிவாகை சூடிய கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிக் களிப்பில் அறிவித்தார்.

பேரினவாதத் தீயை மூட்டி, அதில் அரசியல் குளிர்காய்ந்தபடி, அதையே மூலதனமாக்கி அந்தத் தேர்தலில் அவர் வென்றார்.

தொடர்ந்து அதே தந்திரோபாயத்தையே - உத்தியையே - இந்தத் தேர்தலிலும் அவரும் அவரது தரப்பினரும் முன்னெடுக்கின்றனர் என்பது வெளிப்படையானது. நிதர்சனமாக - பகிரங்கமாக - அந்த இனவாதமே இந்த ஆட்சிப் பீடத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பிரதிபலித்து நிற்கின்றது.

காலங்காலமாக முஸ்லிம்கள் கணிசமாக இடம்பெற்று வந்த அமைச்சரவையில் இப்போதைய ராஜபக்ஷ அரசின் கீழ் மருந்துக்குக் கூட ஒரு முஸ்லிம் இல்லை.

சிறுபான்மையினரில் ஒரு தரப்பினரான முஸ்லிம்களை ஒரேயடியாகப் புறம் ஒதுக்கி, பேரினவாதத்தைக் கிளப்பி, அந்த இனவாத வெறியில் அரசியல் செய்யும் இலக்கின் பிரதிபலிப்பே இது.

இலங்கை பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் காலம் தொடக்கம் இந்தப் பேரினவாதமே இலங்கைத் தீவின் அரசியலின் செல்நெறியைத் தீர்மானிக்கும் ஒரே சக்தியாக இருந்து வருகின்றது.

சிங்கள பேரினவாத மேலாண்மை தென்னிலங்கையில் தீவிரம் பெற்று விஸ்வரூபம் எடுத்திருக்கும் சமயம் இது.

இன, மத, மொழி சமரசம் பேசுகின்ற நியாயமான தரப்புகளைத் தென்னிலங்கைப் பேரினவாதம் துரோகிகளாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும், சமூக விரோதிகளாகவும் நோக்கும் ஒரு சிந்தனைப் போக்கு, கருத்து நிலைப்பாடு தென்னிலங்கையில் ஆழமாக வேரூன்றி வருகின்றது.

சிறுபான்மை இனங்களின் தனித்துவ அடையாளங்களை அழித்து, ஒழித்து, இந்தத் தீவின் மீதான சிறுபான்மையினரின் வாழ்வியல் பூர்வீக உரிமைகளை அடியோடு மறுத்து, நிராகரித்து, அந்தத் தரப்புகளை அடிமைகளாக்க வேண்டும் என்ற எண்ணமே தென்னிலங்கையில் விதைக்கப்பட்டிருக்கின்றமையால், அந்தச் சிந்தனைப் போக்கில் செயற்படும் பேரினவாதிகளுக்கே அங்கு மக்கள் செல்வாக்கும், ஆதரவும் கிட்டும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இனவெறியைத் தூண்டி அதன் மூலம் வாக்குப் பெற முயற்சிப்பது, அவ்வாறு முயல்வோரின் இயலாமையை - கையாலாகாத்தனத்தை - காட்டுகின்றது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறினாலும் கூட அது ஒரு வகையில் சரியானதும், இன்னொரு வகையில் பிழையானதுமாகும்.

இனவெறி ஊட்டி, பேரினவாதத்தைக் கிளப்பி, அதன் மூலம் வாக்கு வங்கியை இலகுவாகச் சூறையாடலாம் என்ற தந்திரோபாயம் தெரிந்தவர்களே அதனைக் கனகச்சிதமாக முன்னெடுக்கின்றனர். ஆகவே அது கையாலாகாத்தனம் அல்ல. அதையும் தாண்டி, நரித் தந்திர அரசியல் புத்திசாலித்தனமாகும்.

வரலாற்றுப் புனைகதைகளையும் சரித்திரப் பொய்மைகளையும் கொண்டு வனையப் பெற்ற தவறான கற்பித்தங்களின் அடிப்படையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் மமதை கொண்டு செயற்படுகின்றது.

இந்தப் போக்கு ரவூப் ஹக்கீம் சுட்டிக் காட்டுவது போல நாட்டின் அபிவிருத்திக்கு - சுபீட்சத்துக்கு - நல்ல எதிர்காலத்துக்கு - வழி சமைக்காது. அழிவுக்கே வழி வகுக்கும்.

என்ன செய்வது? அதுதான் இந்த நாட்டின் தலைவிதி என்றாகி விட்டதே...!.

# எங்கள் உறவுகளைக் காணாமலாக்கியவரே இன்று ஜனாதிபதி என்பதால் அஞ்சுகிறோம்

## அம்பாறை தம்பிலுவில் கவனவீர்ப்பில் தெரிவிப்பு













இன்று ஜனாதிபதியாக இருப்பவரால்தான் எங்களது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டன. அவர் ஜனாதிபதியாக வந்திருக்கின்றமை எங்களுக்குப் பீதியாக இருக்கிறது என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் இணைப்பாளர் தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று அம்பாறை மாவட்டத்தின் தம்பிலுவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அலுவலகத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட சங்க இணைப்பாளர் தம்பிராசா செல்வராணி மேலும் கூறியவை வருமாறு:-

எட்டுமாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டமானது 10 ஆண்டுகளை கடந்து 11 வது ஆண்டில் தொடர்கின்றது .

எங்களது உறவுகளை வீடுகளிலிருந்து மனைவி ,தாய், பிள்ளைகள் அழ அழைத்து சென்றார்கள். மாடுகட்ட சென்றவர்களையும் கடத்திசென்றுள்ளனர். எங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்து என்று உண்மை எங்களுக்கு தெரியும் வரை போராட்டம் தொடரும்.

அண்மையில் இராணுவ தளபதி சவேந்திர டி சில்வா காணாமல் ஆக்கப் பட்ட உறவுகள் அனைவரும் உயிருடன் இல்லை எனத் தெரிவித்திருந்தார். ஏன் அப்படி கூறியிருந்தார் என எனக்கு தெரியாது. எனது கணவரை 2009 - 05 - 17 ஆம் திகதி எனது கையால் இராணுவத்தினரிடம் ஒப்படைத்தேன். ஆயிரக் கணக்கான சரணடைந்த உறவுகளை பஸ்களில் ஏற்றிச் சென்றதைக் என் கண்ணால் கண்டேன்.

உயிருடன் ஒப்படைத்த என் உறவுகள் தற்போது இல்லை என கூறுவதற்கு இராணுவத் தளபதிக்கோ ஜனாதிபதிக்கோ உரிமை இல்லை. எங்களுக்கு இவர்களே பதில் கூறவேண்டும். எமது போராட்டத்திற்கு எந்த ஒரு முடிவும் இங்கு கிடைக்காது இருப்பதினாலேயே சர்வதேசத்திடம் கையேந்தி நிற்கின் றோம். நூற்றுக்கணக்கான உறவுகள் காணா மல் போன தம் உறவுகளுக்காக காத்திருந்து உயிரிழந்துள்ளனர் .

இனிமேலும் இந்த நாட்டில் எந்த ஒரு உறவும் காணாமல் ஆக்கப்பட கூடாது . என் கணவன் இருந்திருந்தால் நான் வீதியில் நின்றிருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது. இராணுவத் தளபதியும் ஜனாதிபதியும் எவ்வித சாக்கு போக்குகளை சொல்லாது எங்களுக்குப் பதில் கூற வேண்டும்.

ஜனாதிபதியால் தான் எங்களது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர் ஜனாதிபதியாக வந்திருப்பது எங்களுக்கு பீதியாக இருக்கிறது. இனிமேல் ஜனாதிபதியின் ஆட்சி காலத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என எந்த உயிரும் காணாமலாக்கப்பட கூடாது எனத் தெரிவித்தார்.

# அரசியல் பழிவாங்கல்: 2,000 முறைப்பாடுகள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவினால் 18 விடே விசாரணைகளுக்கான சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன என ஆணைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2015 ஜனவரி எட்டாம் திகதி முதல் 2019 நவம்பர் 16 ஆம் திகதி வரை இடம்பெற்றுள்ள அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அதற்கிணங்க மேற்படி ஆணைக்குழுவில் இதுவரை 2000 முறைப்பாடுகள் முன்வைக் கப்பட்டுள்ளன. அவற்றில் 97 முறைப்பாடுகளுக்கான விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசேட பொலிஸ் பிரிவின் மூலம் அந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி ஆணைக் குழுவின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஆறு மாத காலம் வர்த்தமானி மூலம் அதற்கு வழங்கப்பட்டிருந்தது..

எனினும் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்றுள்ள 2000 அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் உள்ள நிலையில் மேற்படி காலத்தை மேலும் சில மாதங்கள் நீடிப்பதற்கு நேரிடலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

# கராச்சி சந்தைத் தாக்குதலில் இந்தியாவுக்குத் தொடர்புண்டு!

## பாகிஸ்தான் குற்றச்சாட்டுக்கு - இந்தியா பதில்

பாகிஸ்தானின் கராச்சி பங்குச்சந்தையில் நேற்று நடந்த தாக்குதலில் இந்தியாவுக்குத் தொடர்புள்ளது என்று பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெக்மூத் குரேஷி தெரிவித்தார். அவரது கருத்துக்கு இந்தியத் தரப்பிலிருந்து இந்திய வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவஸ்தவா மறுத்துப் பதிலளித்தார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கராச்சியில் நடந்த தாக்குதலுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருக்கிறது. இந்தியா சார்ந்தவர்கள்தான் இந்தத் தாக்குதலைச் செய்துள்ளார்கள் என்று பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சர் மெக்மூத் குரேஷி குற்றம்சாட்டினார். இதற்கு இந்திய வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் அனுராக் ஷிவஸ்தவா மறுப்புத் தெரிவித்தார். பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெக்மூத் குரேஷி பொறுப்பற்றவகையில் அபத்தமான கருத்துகளைத் தெரிவித்துள்ளார். தீவிரவாதத்தை எதிர்த்துக் குரல் கொடுப்பதில் இந்தியாவுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. பாகிஸ்தான் தனது உள்நாட்டுப் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல், மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப இந்தியா மீது வீண் பழிசுமத்துகிறது எனத் தெரிவித்தார் அனுராக் ஸ்ரீவஸ்தவா.





**கராச்சி தாக்குதல்**

கராச்சி நகரின் சந்திரகர் வீதியில் உள்ள சந்தைக்குள் காரில் வந்த 4 ஆயுததாரிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. துப்பாக்கியால் சுட்டும், கைக்குண்டுகளை வீசியும் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினர். இருதரப்பினருக்கும் இடையே நடந்த மோதலில் 4ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். பொலிஸார், பொதுமக்கள் என 7 பேர் உயிரிழந்தனர். இந்தத் தீவிரவாதத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், அதிபர் ஆரிப் அஃல்வி ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

# ட்ரோன் மூலம் மருந்து தெளித்து அழிக்கப்பட்டன வெட்டுக்கிளிகள்



இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் வெட்டுக்கிளிகள் படையெடுக்கத் தொடங்கியுள்ள நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்த ட்ரோன் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது.

ராஜஸ்தானைத் தொடர்ந்து ஹரியாணா, உத்தர பிரேதச மாநிலங்களின் பல பகுதிகளிலும் வெட்டுக்கிளிகள் படையெடுக்கத் தொடங்கியுள்ளன. குருகிராம் உட்பட மாநிலத்தின் பல பகுதிகளிலும் இன்று காலை வெட்டுக்கிளிகள் காணப்பட்டன. அதுபோலவே உ.பி.யின் ஆக்ரா உள்ளிட்ட இடங்களில் வெட்டுக்கிளிகள் காணப்பட்டன. இதையடுத்து, அங்கு பூச்சி மருந்தை தெளிக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டனர். பூச்சிக்கொல்லி தெளிப்பதற்காகத் தீயணைப்பு படைகள், கண்காணிப்பு சாதனங்கள், ஸ்பிரே சாதனத்துடன் கூடிய கட்டுப்பாட்டு வாகனங்கள் மற்றும் டிராக்டர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பறக்கும் ட்ரோன் பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்டன. மத்திய அரசு வழங்கிய 4 ட்ரோன்கள் மூலம் பல கிலோ மீற்றர் பரப்பளவு நிலப்பகுதியில் ஒரே நேரத்தில் பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்டன.

இதன் மூலம் ஆக்ரா பகுதியில் 60 சதவீத வெட்டுக்கிளிகள் கொல்லப்பட்டுள்ளன என உ.பி. வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**வெட்டுக்கிளிகள் படையெடுப்பு**

வெட்டுகிளிகள் பெரிய அளவில் படையெடுத்து வந்து



பயிர்களை உண்பது பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து உருவாகும் இந்த வெட்டுக்கிளிகள் ஒரே நாளில் 150 கிலோமீற்றர் தூரம் வரை பயணிக்கும் ஆற்றல் கொண்டவை.

இந்த மாத தொடக்கத்தில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் பரவியிருந்த பாலைவன வெட்டுக் கிளிகள் இந்தியாவின் உத்தரபிரதேசம், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், குஜராத், பஞ்சாப் போன்ற பல மாநிலங்களுக்கும் படையெடுத்தன. இவை உணவுப் பயிர்களையும் தாவர இனங்களையும் நாசம் செய்து வருகின்றன.



# பொலிஸாரைக் கண்டித்து வழக்கறிஞர்கள் போராட்டம்

நீதிபதியை அவதூறாகப் பேசிய பொலிஸாரைக் கண்டித்து கோவில்பட்டியில் வழக்கறிஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்குச் சென்ற கோவில்பட்டி குற்றவியல் நீதிமன்ற நடுவர் பாரதிதாசனை அவதூறாகப் பேசி, மிரட்டல் விடுத்த பொலிஸார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கைது செய்ய வேண்டும். தந்தை, மகனைப் படுகொலை செய்த பொலிஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என வலியுறுத்திக் கோவில்பட்டி சார்பு நீதிமன்றம் அருகே வழக்கறிஞர்கள் திரண்டனர்.

அங்கிருந்து ஊர்வலமாக அவர்கள் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு வந்து, வழக்கறிஞர் விஜயபாஸ்கர் தலைமையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**பின்னணி**

சாத்தான்குளத்தில் பொலிஸ் காவலில் அடுத்தடுத்து உயிரிழந்த தந்தை, மகன் விவகாரம் தொடர்பாக நீதித்துறை நடுவர் நடத்திய விசாரணைக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்க மறுத்து, நீதித்துறை நடுவரைத் தவறாகப் பேசி, நீதித்துறை நடுவர் விசாரணையை காணொலியில் பதிவு செய்தனர் தூத்துக்குடி மாவட்ட மேலதிக பொலிஸ் கண்காணிப்பாளர் குமார், துணைப் பொலிஸ் கண்காணிப்பாளர் பிரதாபன், பொலிஸ் அதிகாரி மகாராஜன் ஆகியோர். குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்காக உயர் நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாகுமாறு உயர் நீதிமன்றம் அவர்களுக்கு உத்தரவிட்டது.

# சாத்தான்குளம் விவகாரம் தற்காலிகமாக சி.ஐ.டி. வசம்



சாத்தான்குளத்தில் பொலிஸ் காவலில் அடுத்தடுத்து உயிரிழந்த தந்தை, மகன் விவகாரம் தொடர்பான வழக்கைச் சி.பி.ஐ. விசாரிக்கும் வரை தற்காலிகமாகச் சி.பி.சி.ஐ.டி. விசாரிக்கும் என்று உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை அறிவித்துள்ளது.

நீதித்துறை நடுவர் நடத்திய விசாரணைக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்க மறுத்தது, நீதித்துறை நடுவரைத் தவறாகப் பேசியது, நீதித்துறை நடுவர் விசாரணையை காணொலியில் பதிவு செய்தது போன்ற காரணங்களுக்காகத் தூத்துக்குடி மாவட்ட மேலதிக பொலிஸ் கண்காணிப்பாளர் குமார், துணைப் பொலிஸ் கண்காணிப்பாளர் பிரதாபன், பொலிஸ் அதிகாரி மகாராஜன் ஆகியோர் குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்காக இன்று உயர் நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாகுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் பி.என்.பிரகாஷ், பி.புகழேந்தி அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மூவரும் நேரில் முன்னிலையாகினர். அவமதிப்பு வழக்கு விசாரணையை 4வாரங்களுக்குஒத்திவைத்தநீதிபதிகள், வழக்குவிசாரணையை சி.பி.ஐ. தொடங்கும் வரை காத்திருக்காமல் நெல்லை சி.பி.சி.ஐ.டி. டி.எஸ்.பி அனில்குமார் விசாரிப்பார் என அறிவித்தனர்.

# கொரோனா போன்ற பெருந்தொற்று சீனாவில் பன்றிகளிடையே பரவுகிறது



சீனாவில் புது விதமான காய்ச்சல் பரவி வருகிறது. அண்மையில் பரவத் தொடங்கியுள்ள இந்தக் காய்ச்சல் பன்றிகளிடையே பரவி வருகிறது.

ஆனால், எந்த நேரத்திலும் இது மனிதர்களைத் தாக்கலாம் என்ற ஆபத்து இருந்து வருகிறது. இப்போது இது உடனடியான பிரச்சினை இல்லை என்றாலும், பின் வரும் காலங்களில் எப்போது வேண்டுமானாலும் இது மனிதர்களிடையே பரவும் வாய்ப்புள்ளது.

இந்த வைரஸை பு4 நுயு ர்1ஹி1 என ஆராய்ச்சியாளர்கள் அழைக்கிறார்கள். இந்தக் காய்ச்சல் கொரோனா வைரஸ் தொற்று போல உலகப் பெருந்தொற்றாக மாறும் அச்சுறுத்தல் உள்ளது என ஆய்வாளர்கள் கவலை கொண்டுள்ளனர். இது புதுவிதமான வைரஸ் என்பதால் மனிதர்களுக்கு இதை எதிர்கொள்ள நோயெதிர்ப்பு சக்தி இருக்காது என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்போது வரை இதனால் பேராபத்து ஏதும் இல்லை. ஆனால், இதனை நாம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்கிறார் இது குறித்துத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வரும் பேராசிரியர் கிம் சௌ சாங்.

# எல்லை மோதல் எதிரொலி

## சீனா சிப்பாய்களுக்கு தற்காப்புக் கலை

எல்லைப் பகுதியில் உள்ள சிப்பாய்களுக்குத் தற்காப்புக் கலைகளைப் பயிற்றுவிக்கின்றது சீனா. இந்தத் தற்காப்புக் கலையைக் கற்றுக் கொடுப்பதற்காக அங்கு 20 பயிற்சியாளர்களை எல்லைப் பகுதிக்கு அனுப்பியுள்ளதாகச் சீனா தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைக்கான காரணம் குறித்து இதுவரை அதிகாரபூர்வமாக எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. ஆனால், இந்திய - சீன சிப்பாய்கள் இடையே லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் நடைபெற்ற கைகலப்புக்குப்




பிறகே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 20 பயிற்சியாளர்கள் திபெத்தின் தலைநகர் லாசாவில் தங்கிருந்து சிப்பாய்களுக்குப் பயிற்சியளிப்பாளர்கள் என்று சீனா ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுடனான எல்லைப் பகுதியில் உள்ள சிப்பாய்களுக்கு அவர்கள் பயிற்சியளிப்பார்களா என்பது குறித்துச் சீன ஊடகங்கள் உறுதிப்படுத்தவில்லை.

# ட்ரம்பைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தது ஈரான்!





ஈரானின் இராணுவத் தளபதி காசெம் சுலைமானி கொல்லப்பட்ட விவகாரத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது ஈரான். சுலைமானி கொல்லப்பட்டது தொடர்பாக 36 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்கிறார் ஈரான் விசாரணை அதிகாரியான அலி அல்காசிமெஹர்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுலைமானி கொலைக் குற்றத்தில் அமெரிக்கா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளும் அடங்குவர். இதில் முதன்மையானவர் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். அவரது பதவிக் காலம் முடிந்ததும் அவரைக் கைது செய்யக் கோருவோம் என்றார்.

ஈரான் நீதித்துறை இது தொடர்பாகக் குற்றச்சாட்டு அறிக்கையைத் தாக்கல் செய்யும். தாக்குதல் நடத்திய ட்ரோனை இயக்கியவர்களும் அடையாளம் காணப்படுவார்கள் என ஈரானின் வெளியுறவுத் துறைத் துணை அமைச்சர் மோசென் பஹர்வெண்ட் கூறினார்.

தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்கும் வரை ஈரான் ஓயாது என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த ஈரானுக்கான அமெரிக்க சிறப்புப் பிரதிநிதி, 'இதுவொரு பிரசார யுக்தி. இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை - எனத் தெரிவித்துள்ளார்.

### சுலைமானி கொலை

ஈரான் இராணுவத் தலைவரும், அந்த நாட்டிலேயே அதிக அதிகாரம் பெற்ற இராணுவத் தளபதியாக விளங்கியவருமான ஜெனரல் காசெம் சுலைமானி ஈராக்கில் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டார்.

ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகள், அதிபர் ட்ரம்பின் உத்தரவின் பேரில் பாக்தாத் சர்வதேச விமான நிலையம் அருகே ட்ரோன் தாக்குதல் மூலம் கொன்றதாக ஈரான் தெரிவிக்கிறது. அவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் ட்ரம்ப் மற்றும் 35 பேர் மீது கொலை மற்றும் பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது ஈரான்.

இது தொடர்பாக இன்ரர்போலின் உதவி நாடப்படும் என்றும் தெரிவித்தது. ஆனால், ஈரானின் கோரிக்கையைக் கருத்தில் கொள்ளப் போவதில்லை என இன்ரர்போல் கூறியுள்ளது.



# 2ஆவது அலைத் தாக்கம் முடங்கியது சீனாவின் பீஜிங்

சீனாவின் தலைநகர் பீஜிங் அருகே உள்ள அக்சின் என்ற பகுதியில் கடந்தசில நாள்களாகக் கொரோனா வைரஸ் மீண்டும் பரவத் தொடங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அங்குள்ள இறைச்சி சந்தையில் பணிபுரிவோரிடம் இருந்து இந்த வைரஸ் பரவியிருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இதுவரை அந்தப் பகுதியில் சுமார் 311 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பீஜிங் முழுவதும் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அங்குள்ள பாடசாலைகள், கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள், வணிக வளாகங்கள், கடைகள், திரையரங்குகள் மூடப்பட்டுள்ளன. ஒரு வீட்டில் இருந்து நாளொன்றுக்கு ஒருவர், ஒரு முறை மட்டுமே வெளியே வரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ், சீனாவின் வுஹான் நகரில்தான் முதன்முதலாகப் பரவியது.


கடுமையான ஊரடங்கு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக, அங்கு இந்த நோய் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் முழுவதுமாக கட்டுக்குள் வந்தது. ஆனால், இரண்டாவது அலையாகச் சீனாவின் தலைநகரில் அது பரவி வருகிறது.

# சிரியா குறித்து விவாதம்

சிரியாவில் நடைபெற்று வருகின்ற மோதல்கள் குறித்து விவாதிப்பதற்காக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், துருக்கியின் தயிப் எர்டோகன் மற்றும் ஈரானின் ஹசன் ரூஹானி ஆகியோர் காணொலி மாநாட்டை நடத்துவார்கள் என்று ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிரியாவில் நிலவுகின்ற பதற்றங்களைக் குறைக்கும் நோக்கில் மூன்று நாடுகளும் 2018ஆம் ஆண்டில் கசாக் தலைநகர் அஸ்தானாவில் பேச்சுவார்த்தை நடத்தின.

இந்த நிலையிலேயே தற்போதும் சிரியாவில் நடக்கின்ற மோதல்கள் குறித்து மேற்படி நாடுகளின் தலைவர்கள் மறுபடியும் கூடி விவாதிக்கவுள்ளனர்.



தாய்வானின் ஆளும் கட்சியான ஜனநாயக முற்போக்குக் கட்சியினரும் அந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான கோமிண்டாங் கட்சியிரும் தாய்லாந்தின் தலைநகர் தைபோவிலுள்ள நடாளுமன்றத்தில் சண்டையிட்டனர்.

நன்றி - ரெய்டர்ஸ்.

# ஜூலை 6 பாடசாலைகளில் மணி ஒலிக்கும் ஓசை நாட்டின் ஆரோக்கியத்துக்கு தெளிவான சமிக்ஞை

கொழும்பு, ஜூன்30

எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை கல்வி நடவடிக்கைகள் தொடங்கியவுடன் மணி ஒலிக்கும் ஓசை நாட்டின் ஆரோக்கியத்திற்கு ஒரு தெளிவான சமிக்ஞை என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் பாடசாலைகள் பலவற்றுக்கும் நேற்று நேரில் சென்ற கல்வி அமைச்சர் அங்கு கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கக் கூடிய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது அவர் மேற்கண்டவாறு ஊடகங்களிடம் தெரிவித்தார்.

கொரோனா தொற்று நோயைத் தொடர்ந்து தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் இன்று திறக்கப்பட்டது. எனினும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களே கடமைக்குத் திரும்பினர். முதல் கட்டமாக 5,11 மற்றும் 13 ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் வரும் ஜூலை 6ஆம் திகதி ஆரம்பமாகிறது.

# பயிலுநர் செயற்திட்ட உதவியாளர்கள் மன்னாரில் இன்று ஜனாதிபதிக்கு மகஜர்

மன்னார் மாவட்டத்தில் நியமனம் செய்யப்பட்ட பயிலுநர் செயற்திட்ட உதவியாளர் அனைவரும் ஒன்றிணைந்து இன்று காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று ஜனாதிபதிக்கு ஒப்படைக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜரை கையளித்தனர்.

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சினூடாக பயிலுனர் செயற்திட்ட உதவியாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டது.

எனினும் ஜனாதிபதி தேர்தல் இடம் பெற்ற காரணத்தினால் குறித்த நியமனம் உடனடியாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. எனினும் தேர்தல் முடிவடைந்து பல மாதங்களாகியும் அவர்களுக்கான நியமனம் மீண்டும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் நியமனம் செய்யப்பட்ட பயிலுனர் செயற்திட்ட உதவியாளர் அனைவரும் ஒன்றிணைந்து இன்று (செவ்வாய்க்கிழமை) காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று ஜனாதிபதிக்கு ஒப்படைக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜரை கையளித்தனர்.

தமக்கு இது வரை எவ்வித பதிலும் கிடைக்காத நிலையில் அகில இலங்கை செயல் திட்ட உதவியார் சங்கம் சார்பாகவும், மன்னார் மாவட்ட செயல்திட்ட உதவியாளர்கள் சார்பாகவும் மேற்படி மகஜர் அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கும்,பிரதமருக்கும் வழங்கும் வகையில் கையளிக்கப்பட்டதாகவும், உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு நியமனத்தை பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# செல்வம் அடைக்கலநாதன் போதைப்பொருள் வர்த்தகர்

## என்னை விமர்சிக்க அவருக்கு வெட்கமில்லையா? கடுஞ்சீற்றத்துடன் கேள்வி எழுப்புகின்றார் கருணா



ரெலோ அமைப்பின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன் போதைப்பொருள் வியாபாரி. என்னை விமர்சிக்க அவருக்கு வெட்கமில்லையா?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் கருணா அம்மான் என அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்.

அம்பாறை பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னாரில் போதைப்பொருள் வியாபாரம் செய்து அரசியலுக்கு வந்தவரே செல்வம் அடைக்கலநாதன். இப்போதும் அவர் அந்த வர்த்தகத்தை இரகசியமாகச் செய்து வருகின்றார்.

இப்படியானவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடைக்கலம் கொடுத்து வைத்திருக்கின்றது. அதுமட்டுமல்ல மீண்டும் பொதுத் தேர்தலில் போட்டியிட அவருக்கு சம்பந்தன் வாய்ப்பு வழங்கியுள்ளார்.

எனவே, ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களையும் தமிழ் மக்கள் தோற்கடிக்க வேண்டும் – என்றார்.

# இனவெறியை தூண்ட முயற்சி

## ஹக்கீம் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன்30

இலங்கையில் சிலர் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் செய்ததைப் போலவே தற்போது பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போதும் இனவெறியைத் தூண்ட முயற்சிக்கின்றனர் என இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், இன வெறியைத் தூண்டுவது அரசியல் வாதிகளின் ஆதரவின்மையை வெளிக்காட்டுவதாகச் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு இனவெறியைத்தூண்டுவோர்வெறுமனே அவர்களின் இயலாமையைக் காட்டுகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை முன்னேற்ற அனைத்துச் சமூகங்கள் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்றும் அனைவரும் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்றும்ரவூப்ஹக்கீம்தெரிவித்தார்.

இவ்வாறு நாட்டில் இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் கூறினார்.

# மீளத்திறக்கப்படும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள்

கொழும்பு, ஜூன்30

பகல்நேரசிறுவர்பராமரிப்புநிலையங்களை எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதி திறப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பகல்நேரப் பராமரிப்பு நிலையங்கள் கடந்த மார்ச் முதல் மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றின் பரவல் படிப்படியாக குறைந்து வருவதால் அனைத்துச் சேவைகளும் வழமைக்கு திரும்பியுள்ளன.

பாடசாலைகள் மீள ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களைக் கடும் சுகாதார ஒழுங்கு விதிகளின் கீழ் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் இரண்டு பேர் சுவரொட்டிகளுடன் கைது

யாழ்ப்பாணம் , ஜூன் 30

மன்னார் மாவட்டத்தில் தேர்தல் விளம்பரம் ஒட்டிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டமையோடு ஒரு வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சுவரொட்டிகளுடனேயே இருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸர் தேர்தல் செயலகத்திற்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

# கட்சி விமர்சன அரசியலை விடுத்து எமது திட்டத்தை முன்வைப்போம்!

## தமிழரசு தபேந்திரன் கூறுகின்றார்

கட்சிகளை விமர்சித்து அரசியலை முன்னெடுக்கலாம் என நினைப்பது அரசியல் ஆரோக்கியமற்றது. அதனை விடுத்து நாம் என்ன செய்ய போகின்றோம் என மக்கள் மத்தியில் தெளிவாக தெளிவுபடுத்தி அரசியலை முன்னெடுக்க வேண்டும் என யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளரான வேதநாயகம் தபேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்–

எனது அரசியல் பிரவேசமானது திடீரென ஏற்பட்டது. எனது தந்தை உட்பட குடும்பத்தினர் தொழிற்சங்கள், அரசியலில் ஈடுபட்டிருந்தவர்கள். இந்த நிலையில் புதுமுக வேட்பாளராக தமிழரசு கட்சி என்னை நாடாளுமன்ற தேர்தலில் களமிறக்கியுள்ளது.

எனது தந்தை காலமாகும் வரை அரசியல் ஈடுபாட்டிலிருந்தார். அவர் காலமாகும் தருவாயில் 'நீ அரசியலில் ஈடுபட விரும்பின்தமிழரசுகட்சியுடன்இணைந்தே ஈடுபட வேண்டும்' என என்னை வலியுறுத்தி இருந்தார். அதன் அடிப்படையிலையே நானும் தேர்தலில் போட்டியிட சம்மதித்தேன்.

நான் எழுத்துறை சாரந்தவன் எனும் வகையில் நாம் அனுபவித்த ஊரடங்கு, சோதனை சாவடிகள், ஹர்த்தால்கள் என்



பலவை தொடர்பில் 14 ஆக்கங்களை சிங்கள மொழியில் மொழி பெயர்க்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றேன். எமது கஷ்டங்கள், பிரச்சினைகளை சிங்கள மக்களுக்கு எடுத்து செல்லவுள்ளேன்.

எனது இலக்கு அடித்தட்டு மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்தி, அபிவிருத்தியை முன்னெடுத்து செல்வதுடன், சிங்கள மக்களிடமிருந்து கௌரவமான தமிழ் தேசியத் தீர்வை பெற்றுக்கொள்வதாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் பொருளாதாரம் வீழ்ந்து கிடக்க காரணம் சந்தைத் தோல்வியாகும். அவர்களுக்கு உரிய தொழிற் பயிற்சி இல்லாமையும், குழு வேலைத் திட்டங்களில் ஒற்றுமையின்மை காரணமாகவும் தோல்விகளைச் சந்திக்கின்றனர்.

அதுதொடர்பில் நாம் கவனம் செலுத்தி, அவர்களுக்கான திட்டங்களையும் அறிவுகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்க உள்ளோம். இதனூடாக சந்தை தோல்விகளில் இருந்து மக்களை மீட்க முடியும்.

போட்டி கட்சிகள் தாம் என்ன செய்ய போகின்றோம்எனச்சொல்லாது கட்சிகளை விமர்சித்து தமது அரசியலை முன்னெடுத்து செல்கின்றனர். இது ஆரோக்கியமானதில்லை. அதனை அவர்கள் தவிர்க்க வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சம்பந்தன் ரணில் அரசுக்கு ஆதரவாகவே செயற்பட்டார்

## தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்கிறார் சுரேஷ்



யாழ்ப்பாணம், ஜூன்30

எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சம்பந்தன் தமிழ் மக்களுக்காக எதையும் பெறவில்லை. அவர் ரணில் அரசுக்கு ஆதரவாகவே செயற்பட்டார்.

– இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை விமர்சித்தார் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் பரப்புரைக்கான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இரண்டாவது பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் மல்லாகம் குளமங்காலில் இடம்பெற்றது. அங்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் உட்பட பெரும்பாலான வேட்பாளர்களும் உரையாற்றினர். சுரேஷ் பிறேமச்சந்திரன் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஐந்து கட்சிகளை இணைத்த ஒரு கூட்டணியாக அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் இருக்கக் கூடிய கட்சிகளை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. முன்னர் நாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்தோம்.

எனது தலைமையிலான கட்சியான ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி, ரெலோ, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் பிரதிநிதிகளாக பலபேர் இருந்தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி விட்டார்கள்.

விக்னேஸ்வரன் ஐயா அவர்களை வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது கட்டாயம் அவர் இதில் பங்கு பற்ற வேண்டும், தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பிப்பதில் நீதியரசர் என்ற வகையில் அவர் ஒரு காத்திரமான பங்கு வகிக்கலாம் என்ற அடிப்படையில் அழைத்து வரப்பட்டார்.

அவ்வாறு அழைத்து வரப்பட்டவருக்கு எதிராக மாகாண சபையில் அவர்களே நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அவ்வாறு ஏன் அந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார்கள்? அவர் வடக்கு மாகாண சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். அதாவது, இலங்கையில் நடைபெற்று முடிந்த யுத்தத்தில் இடம்பெற்றது ஓர் இனப்படுகொலை என்பதுதான் அந்தத் தீர்மானம். இத்தீர்மானம் ஆட்சியாளரை சங்கடப்படுத்தும் என்பதால் கூட்டமைப்புத் தலைமை எதிர்த்தது.

மேலும் இறுதி யுத்தத்தைப் பற்றி விசாரிக்க ஐ.நா. பொதுச் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மூன்று பேர் அடங்கிய குழுவை நியமித்தார். அந்தக் குழு யுத்தம் நடைபெற்ற இறுதிக் காலத்தில் ஏறக்குறைய எழுபதாயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்றும் யுத்தக் குற்றங்கள் நடைபெற்றன என்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணை அவசியம் என்றும் பரிந்துரைத்தது. அதனை விசாரிப்பதற்கு ஜெனீவா மனித உரிமைகள் ஆணையகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஜெனீவா மனித உரிமைகள் ஆணையகமும் அது தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றியது.

இறுதியில் இலங்கை அரசும் அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதாக ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை அமைக்கப்பட வேண்டும். அதில் உள்நாட்டு நீதிபதிகள், வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடங்கலாகக் கலப்பு விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் யுத்தக் குற்றங்கள் எவ்வாறு நடந்தன, ஏன் நடைபெற்றன என்று விசாரிக்கப்பட வேண்டும் என்றும், அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்றும் எதிர்காலத்தில இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அது மட்டுமல்லாமல் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், முப்படையினரிடம் உள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமான தெளிவான முடிவுகள் அரசு எட்ட வேண்டுமென அந்த ஜெனீவாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

கடந்த காலத்தில் இருந்த அரசு இத்தீர்மானங்களை ஏற்று நடைமுறைப்படுத்துவதாக ஒத்துக் கொண்டாலும் அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஐ.நாவுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாக மைத்திரிபால சிறிசேனா மற்றும் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய ஒரு நீதிமன்றத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என அறிவித்தார்கள்.

அது மாத்திரமல்லால் தற்போதுள்ள கோட்டாபய அரசு ஜெனீவாவில் இத்தீர்மானத்தில் இருந்து விலகி விட்டார்கள். நாம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை, எமது இராணுவத்தினரை யாரும் விசாரணைக்கு உட்படுத்த முடியாது என்றும் கூறிவிட்டார்கள்.

ஆனால், இந்த விடயங்கள் நடைபெற்ற காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை தம் வசம் வைத்திருந்தது. இவை அனைத்தும் நடைபெற்ற பொழுது சம்பந்தன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். ஆனாலும், அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கொண்டு வந்த அரசாங்கம், நாங்கள் கொண்டு வந்த ஜனாதிபதி ஆகவே இவர்கள் எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள் என்று கூறப்பட்டது. அவர்களுடைய பதவிக் காலத்தில் புதிய அரசியல் சாசனம் கொண்டு வரப்படும், அதில் தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என பல விடயங்களை தெரிவித்தார்கள். அரசியல் சாசனத்தை கொண்டு வருவதற்காக சம்பந்தன் அவர்கள் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக எதனையுமே பேசவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமாக பிரச்சினைகளை பேசினால் அரசியல் சாசனம் குழம்பிவிடும் என்று காரணம் கூறப்பட்டது. இறுதியில் அரசியல் சாசனமும் இல்லை, ஏனைய அடக்கு முறைகளுக்கான தீர்வுகளையும் எட்ட முடியவில்லை.

அரசியல் சாசன விடயங்கள் சம்பந்தமாக குறிப்பிடுகையில், முக்கியமான ஒன்றாக இந்திய – இலங்கை ஒப்பந்தத்தினூடாக வடக்கு–கிழக்கு மாகாணம் இணைக்கப்பட்டது. இணைக்கப்பட்டதற்கு காரணமாக இருப்பது வட – கிழக்கு தமிழ் மக்களின் வரலாற்று பூர்வமான வாழ்விடம், அவர்கள் ஒன்றாக வாழவிரும்புகிறார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அது ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டது. திருகோணமலை தலைநகராக மாற்றப்பட்டது. 18 ஆண்டுகளின் பின் வடக்கு – கிழக்கு இணைப்பு பிரிக்கப்பட்டது. இன்றைய சூழலில் அதாவது, யுத்தத்துக்கு பின்னர் உள்ள காலத்தில் சிங்கள குடியேற்றங்கள் வடமாகாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வவுனியா, முல்லைத்தீவு, நாவற்குழி ஆகிய இடங்களில் ஏறக்குறைய இருபதாயிரத்திற்கு மேற்பட்டோர் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள்.

அது மாத்திரமல்லாமல் ஜனாதிபதியால் கிழக்கு மாகாணத்தில் புதிய செயலணி ஒன்றை மேதானந்த தேரர் உட்பட்ட தேரர்களையும் இராணுவத்தையும் உள்ளடக்கி உருவாக்கியுள்ளார்கள். எதற்காக என்றால் கிழக்கில் உள்ள சிங்கள் பௌத்த சின்னங்கள் எங்கெல்லாம் உள்ளதோ அவற்றை அடையாளங் கண்டு அந்த இடங்களை தம்வசப்படுத்தி கிழக்கை மேலும் சிங்கள – பௌத்தமயமாக்குவதற்கு.

தமிழ் மக்களின் வரலாறு 3000 வருடங்களுக்கு முற்பட்ட வரலாறு. இவர்கள் யாரும் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள் அல்லர்.

ஆனால், மகாவம்சத்தில் விஜயன் இந்தியாவில் இருந்து 700 தோழர்களுடன் வந்ததாக குறிப்பிடுகின்றது. அது மட்டும் அல்லாமல் விஜயன் வருகின்ற பொழுது இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் இருந்தன எனச் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். அது மாத்திரமல்லாமல் இலங்கையை ஆண்டவன் இராவணன். ஒரு சிவ பக்தன். இராமாயண காலம் 10000 வருடங்கள் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இன்றைய சூழலில் இராவணனுக்கும் கூட உரிமை கோர ஆரம்பித்துள்ளார்கள் பௌத்தர்கள்.

திருகோணமலையில் உள்ள கன்னியா வெந்நீரூற்று கிணறு இராணவனால் தனது தாயின் இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டதாக ஐதீகங்கள் கூறுகின்றன. ஆனால் இன்று முழுமையாக சிங்கள, பௌத்தர்களால் அது கபளீகரம் செய்யப்பட்டு விட்டது. அங்கிருந்த சிவன் ஆலயம், பிள்ளையார் ஆலயம் முற்றுமுழுதாக அழிகப்பட்டு விட்டன.

எமது உரிமைகளுக்காக செல்வநாயகம் போராடினார், அதன் தொடர்ச்சியாக ஆயுதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அது சர்வதேசத்தின் உதவியுடன் மௌனிக்கப்பட்டு விட்டது. அதன் பின்னர் வந்த கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச அமைப்புக்களின் உதவியுடன் தீர்ப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர்கள் இலங்கை அரசை பாதுகாப்பதிலேயே முழுமையாக ஒன்றாக இருந்தார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் பதவி பறிபோன போது உயர் நீதிமன்றம் வரை சென்று அவரது பதவியைக் காப்பாற்றிய போது கூட எமது பிரச்சினைகள் தொடர்பாக எந்த விடயத்தையும் தீர்க்கவில்லை.

இப்படியான ஒரு சூழலில்தான் மாற்றுத் தலைமை என்ற சிந்தனை மக்கள் மத்தியில் ஏற்பட்டது. புதிய சிந்தனை, புதிய அணுகுமுறையின் அவசியம் ஏற்பட்டது இதன் அடிப்படையில் தான் நாம் விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் புதிய கூட்டணியாக இணைந்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். – என்றார்.

# சேருநுவரவில் வயோதிபர் கத்தியால் குத்திக் கொலை



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை பகுதியிலுள்ள கடற்கரையில் கத்திக்குத்துக்கு இலக்கான ஆணொருவரின் சடலமொன்று இன்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் புத்தளம், காரியப்பர் வீதி முஹம்மது ஹனிபா ஹாரிஸ் (60 வயது) எனவும் தெரியவருகின்றது.

கல்லடி, மீன்வாடி கடற்கரை பகுதியில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடப்பு, தானஞ்சோலை, ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த குமாரவேல் சுப்பிரமணியம் (49வயது) என்பவர் தானே கத்தியால் குத்தி ஒருவரைக் கொலை செய்துள்ளார் எனத் தெரிவித்துவிட்டு வாழைத்தோட்டம் பகுதியில் உள்ள இராணுவ முகாமிற்குள் புகுந்துள்ளார்.

இந்நிலையில் சந்தேகநபரை இராணுவத்தினர் சேருநுவர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கத்திக்குத்துக்கு இலக்கான வயோதிபரின் சடலம் தற்பொழுது சம்பவ இடத்திலேயே காணப்படுகிறது. மரணம் தொடர்பில் சேருநுவர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்

# நாடாளுமன்றத் தேர்தலும் வாக்களிப்பு முறையும்

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் முக்கிய விடயமாகக் காணப்படுவது தேர்தலாகும். நாட்டு மக்கள் நிறைவேற்ற வேண்டிய மிக முக்கிய ஜனநாயகக் கடமைகளுள் ஒன்று தேர்தல் எனலாம். தேர்தல் என்பது நாட்டின் மக்கள் பொது வாழ்வில் பதவிகளை நிர்வகிப்பதற்காக ஒரு தனிநபரைத் தேர்ந்தெடுக்கும் செயல் முறை ஆகும். இது மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் இடம்பெறுகின்றது. பண்டைய கிரேக்க காலத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலங்களில் பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுப்பது நேரடியான முறையில் இடம்பெற்றது. 17 ஆம் நூற்றாண்டு காலப்பகுதி வரை அரச பதவிகளுக்காக பொதுத் தேர்தல் நடத்தப்படும் தேர்தல் முறை நடைமுறைக்கு வரவில்லை. இதற்குப் பின்னரே இந்த நவீன தேர்தல் முறை தோற்றம் பெற்றது.



### பழமை வாய்ந்த மக்களாட்சி

இலங்கையானது தெற்காசியாவிலேயே பழமை வாய்ந்த மக்களாட்சி முறையைக் கொண்டுள்ளது. 1931 இல் டொனமூர் ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட டொனமூர் அரசமைப்பு பொதுத் தேர்தல்கள் நடாத்தும் முறையை உருவாக்கியதோடு, சர்வஜன வாக்குரிமையினையும் அறிமுகப்படுத்தியது. இலங்கையில் முதலாவது பொதுத் தேர்தல் 1931.06.13 திகதியில் இருந்து 7 நாள்களுக்கு நடைபெற்றது. இலங்கை சுதந்திரம் பெறாமலேயே 1947 ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை முதலாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு ஒரு மக்களாட்சியைக் கொண்ட ஒற்றையாட்சி முறையைப் பின்பற்றும் சிறு தீவாகும். ஜனாதிபதி முறையாலும், நாடாளுமன்ற முறையாலும் ஆட்சி செய்யப்படுகின்றது. எமது நாட்டில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என பல தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன.

**நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கப்போகும் வாக்காளருக்கு ஒரு வாக்குச் சீட்டு மட்டுமே வழங்கப்படும். அந்த வாக்குச் சீட்டில் பிரதான கட்சிகளும், அவர்களின் சின்னங்களும் இடம்பெற்றிருக்கும். அதற்குக் கீழே வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் காணப்படும்.**

### 22 தேர்தல் மாவட்டங்கள்

இவ்வருடம் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறப்போகின்ற பொதுத் தேர்தல் சுதந்திர இலங்கையின் 16 தேர்தலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் (1978 வது யாப்பின் படி ஒன்பதாவது தேர்தலுமாகும். நாடாளுமன்றிற்கான பதவிக் காலம் 5வருடம். தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றம் நான்கரை ஆண்டுகள் நிறைவுற்றதன் பின்னர் அதனைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்குள்ளது. இதனடிப்படையில் பதவியிலிருந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தற்போது பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

நாட்டிலுள்ள 25 நிர்வாக மாவட்டங்கள் நாடாளுமன்றத் தேர்தலின் பொருட்டு 22 தேர்தல் மாவட்டங்களாக வரையறுக்கப்படுகின்றன. இது எவ்வாறெனில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்கள் ஒரு தேர்தல் மாவட்டமாகவும், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களும் வன்னி தேர்தல் மாவட்டமாக இணைக்கப்பட்டுள்ளன.



### வாக்குச் சீட்டு

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கப்போகும் வாக்காளருக்கு ஒரு வாக்குச் சீட்டு மட்டுமே வழங்கப்படும். அந்த வாக்குச் சீட்டில் பிரதான கட்சிகளும், அவர்களின் சின்னங்களும் இடம்பெற்றிருக்கும். அதற்குக் கீழே வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் காணப்படும். நாடாளுமன்றத் பொதுத் தேர்தலில் ஒரு வாக்காளர் மூன்று விருப்பு வாக்குகளை வழங்க முடியும். குறித்த மாவட்டத்தில் நாடாளுமன்றத்திற்கு போட்டியிடும் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் சின்னத்திற்கு வாக்காளர்கள் முதலில் வாக்களிக்க வேண்டும்.

அத்தோடு அதே அணியில் போட்டியிடும் மூன்று வேட்பாளருக்கு ஒவ்வொரு புள்ளடியினை இடலாம். மூவருக்கு வழங்காவிட்டாலும் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ தன்னுடைய விருப்பு வாக்குகளை வழங்கலாம். அல்லது தனது விருப்பு வாக்கினை வழங்காமலும் விடலாம். ஒரு அணியின் சின்னத்திற்கு அளிக்கப்படும் வாக்கே அச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருக்கு உரித்தாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகூடிய வாக்குகளைப் பெறும் அணிக்கு அதாவது கட்சி அல்லது சுயேட்சைக்குழுவுக்கு மேலதிகமாக ஒரு உறுப்பினர் பதவி உரித்தாவதுடன் ஏனைய உறுப்பினர்கள் அணியினர் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப தெரிவு செய்யப்படுவர்.

### போனஸ் வழங்கப்படும்

22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அடிப்படையில் போனஸ் இடங்கள் வழங்கப்படும். மொத்தமாக 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் 160 உறுப்பினர்களும், 36 உறுப்பினர்கள் போனஸ் இடங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வாறு நாடாளுமன்றத்திற்கு 196 பேர் வாக்காளர்களின் மூலமும், 29 பேர் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் நாடளாவிய ரீதியில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

### வாக்களிப்பதில் கவனம் தேவை

தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பதில் வாக்காளர்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். மிகச் சரியாக வாக்களிக்கத் தவறுகின்ற சந்தர்ப்பங்களில் தாம் அளித்த வாக்கு செல்லுபடியற்ற வாக்காகக் கருதப்படும். தாம் விரும்புகின்ற கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவிற்கு கட்டாயம் வாக்களிக்க வேண்டும் அவ்வாறு வாக்களிக்காவிட்டால் அது நிராகரிக்கப்படும். மூன்றிற்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளை ஒருவர் பயன்படுத்துதல், (ஆனாலும் அது கட்சிக்கு அல்லது சுயேச்சை குழுவுக்கு மட்டும் கிடைத்த வாக்காகக் கருதப்பட்டு எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும்.) வாக்குச் சீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு அல்லது சுயேட்சை குழுவிற்கு புள்ளடியிடல், அதேபோன்று ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிக்கும், மூன்றிற்கு மேற்பட்ட இலக்கங்களிற்கும் புள்ளடி இடும் போதும், வாக்குச் சீட்டில் ஒரு தெரிவும் இல்லாம் கீறிவிடப்படல், வாக்குச் சீட்டில் கையொப்பம் இடுதல். போன்ற பல காரணங்களால் வாக்குகள் நிராகரிக்கப்படுகின்றன.

### நிராகரிக்கப்படுகின்ற வாக்குகள்

18 வயதிற்கு மேற்பட்ட இலங்கை குடியுரிமை பெற்றவர் தேர்தலில் வாக்களிக்க முடியும். தேர்தலில் வாக்களிப்பது கட்டாயமில்லை. ஆனால் வாக்களிக்கும் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி வாக்குகள் நிராகரிக்கப்படாமல் செல்லுபடியான வாக்குகளாக மாற்றுவது வாக்காளர்களின் கையிலேயே உள்ளது. கடந்த காலங்களில் குறிப்பாக 1947 – 2015 வரை நடைபெற்ற பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகளவானதாக இருந்தது. இறுதியாக நடைபெற்ற (2015 ஒகஸ்ட் 17) 15 வது பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 5,16,926 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதனை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. இவ்வாறு ஒவ்வொரு தேர்தலிலும் குறிப்பிட்டளவு வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வண்ணமுள்ளன. 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளை மாவட்ட அடிப்படையில் எடுத்துப் பார்க்கும் போது தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் செறிவாக வாழும் மாவட்டங்களிலேயே நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் வீதம் அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.




இம்முறைத் தேர்தலில் 1,62,63,885 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (இம்முறை பொதுத்தேர்தலுக்காக 2019 ஆம் ஆண்டு பெயர்ப்பட்டியல் பயன்படுத்தப்படவுள்ளது) இவ்வாறு தகுதி பெற்ற ஒவ்வொரு வாக்காளரும் தமது ஜனநாயக உரிமையினை சரியாகப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தும் உரிமையினை ஒழுங்கான முறையில் செல்லுபடியான வாக்குகளாக மாற்றுவது வாக்காளர்களின் முக்கிய கடமையாகும். ஆகவே ஒவ்வொரு தேர்தலிலும் குறிப்பிட்டளவு வாக்குகள் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள் என்ன? என்பதில் கவனம் வெலுத்துவதும், இதற்குத் தீர்வு தேடுவதும் காலத்தின் கட்டாயமாகும். ஏனெனில் ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் அளிக்கப்படுகின்ற ஒவ்வொரு வாக்குமே மிகப் பெறுமதியான தாகவும், வேட்பாளரின் வெற்றியினைத் தீர்மானிப்பவையாகவும் உள்ளது என்பதனை எவராலும் மறுக்க முடியாது.

கட்டுரையாளர் - கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் சமூகவியல் துறை.

# தமிழரின் அழிவுக்குத் துணைபோன கூட்டமைப்பு தேர்தல் என்று வந்ததும் ஒற்றுமை பற்றி பேசுகிறது

## கடுமையாகச் சாடுகிறார் செல்வராஜா கஜேந்திரன்

**(கலையமுதன்)**

யாழ்ப்பாணம், ஜூன் 30

தமிழ் மக்களின் அழிவுக்கு துணைபோன கூட்டமைப்பு தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் ஒற்றுமை பற்றி பேசுகின்றதென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண மக்களைக் காப்பாற்றப் போகின்றோமெனக் கூறி அவர்களின் வாக்குகளை சிதறடித்து, கிழக்கில் தமிழர்களின் இருப்பை இல்லாமல் செய்யவே சில கட்சிகள் முனைகின்றன என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் இரா. சாணக்கியன் தெரிவித்த கருத்து தொடர்பாக வினவிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த பத்து வருடங்களாகத் தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் நாடாளுமன்றம் சென்று இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட சிங்கள பௌத்தமயமாக்கல் தீர்மானங்கள் அனைத்துக்கும் ஆதரவு வழங்கி வந்துள்ளார்கள். குறிப்பாகக் கடந்த ஐந்து வருட நல்லாட்சி அரசாங்கத்தை பாதுகாக்கின்றோம் என்கிற போர்வையில் அவர்களை ஆதரித்தார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை முற்றாக புறக்கணித்து, போரால் பாதிக்கப்பட்ட மக்களை உதாசீனம் செய்து, வடக்கு, கிழக்கிலே ஆயிரம் புத்த விகாரைகளை கட்டுவோமெனக் கூறி கடந்த ஐக்கிய தேசிய கட்சி கொண்டு வந்த வரவு – செலவு திட்டத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள்.

தமிழ்த் தேசியம் பேசி வாக்குகளை பெறும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அதன் பின்னர் முழுமையாக தமிழ் மக்களின் இருப்பை அழிக்கின்ற அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கினார்கள்.





தற்போது மீண்டும் இவர்கள் அதனை நிறைவேற்றவே மக்களின் ஆணையை கோருகின்றனர்.

கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் 11 ஆசனங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்றிருந்த போதும் எதுவித நிபந்தனையுமின்றி குறைவான ஆசனங்களை கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைக்க ஆதரவு வழங்கினர். அடிப்படைவாத சிந்தனையுடைய முஸ்லிம் தலைமைகள் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களின் இருப்பை சிதைப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பும் துணை போனது.

முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்குவதில் நாம் உறுதியாக உள்ளோம். அத்துடன் முஸ்லிம் மக்களுடன் இணைந்து செயற்பட நாம் தயார். ஆனால் முஸ்லிம் தலைமைகள் என்பது அடிப்படைவாத சிந்தனையுடனேயே காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் அழிவுக்குத் துணை போன கூட்டமைப்பு தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் ஒற்றுமை பற்றி பேசுகின்றது. ஆகவே இவர்களுடன் இணைந்து போட்டியிட்டு தமிழின அழிப்புக்கு ஒருபோதும் நாம் துணைபோகமாட்டோம். – என்றும் தெரிவித்தார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய 125 பேர் இலங்கையில்

## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்30

ஐ.எஸ். ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய 125 பேர் இலங்கையில் இருகின்றனர் என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக, விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில், நேற்று முன்னிலையாகியிருந்த பாதுகாப்பு பிரிவில் பணியாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சர் எஸ்.ஜி.சதரசிங்கவே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாரு:–

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலத்தில் அரச உளவுச் சேவை பணிப்பாளராக செயற்பட்ட நிலந்த ஜயவர்தன, கடந்த 2019 ஏப்ரல் 10ஆம் திகதி, மட்டக்களப்பு பகுதியில் பாதுகாப்பு மதிப்பீட்டைக் குறிப்பிட்டு ஓர் இரகசியக் கடிதத்தை அனுப்பியிருந்தார்.

குறித்த இரகசிய கடிதத்தில் இதுவரை ஜனாதிபதிக்கு தெளிவான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் ஐ.எஸ். அமைப்பினை பின்பற்றுபவர்கள் அந்த பகுதிக்குள் இருப்பதால் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அந்த இரகசிய கடிதத்தில், அரச உளவுச் சேவை பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன தெரிவித்திருந்தார்.

எனவே, தீவிரவாத நடவடிக்கைகளை முன்னெடுக்க இப்பகுதியில் வாய்ப்புக்கள் உள்ளதால் பாதுகாப்பை பலப்படுத்த அவர் வலியுறுத்தி இருந்தார்.

இதேவேளை சுதந்திர தினத்திற்கு முந்தைய தினம் இடம்பெற்ற மதிப்பீட்டுக் கூட்டத்திற்காக, அரச உளவுச் சேவையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் லலித் நாணயக்கார வந்திருந்தார். அதன்போது இலங்கையில் ஐ.எஸ். உடன் 125 பேர் இணைந்திருக்கின்றனர் எனவும் அவர்களில் இருவர் ஏற்கனவே வெல்லம்பிட்டி மற்றும் தெஹிவளை ஆகிய இடங்களில் வசித்து வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும் ஈராக் மற்றும் ஈரானில் ஐ.எஸ். தோல்வியடைந்த பின்னர் அவர்கள் ஏனைய நாடுகளைத் தாக்க திட்டமிட்டுள்ளனரென லலித் நாணயக்காரா குறிப்பிட்டிருந்தார் என உதவி பொலிஸ் அத்தியட்சர் எஸ்.ஜி.சதரசிங்க, ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு ஆதரவு அமெரிக்கா அறிவிப்பு

## இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடல்

இலங்கையுடனான அபிவிருத்தி உள்ளிட்ட இறையாண்மையைப் பாதுகாப்பதற்கு ஆதரவு வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ தொலைபேசியில் தொடர்புகொண்டு கலந்துரையாடியுள்ளார்.

இந்நிலையில், இந்த தொலைபேசி உரையாடல் தொடர்பாக தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் மோர்கன் ஓர்டகஸ், கொரோனா தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதில் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான அபிவிருத்திக்காகப் பகிரப்பட்ட அர்ப்பணிப்பு குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மனிதாபிமான மற்றும் சுகாதார விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டதாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பகிரப்பட்ட ஜனநாயக மரபுகள், மனித உரிமைகளுக்கான மதிப்பு, மக்களின் நீண்டகால ஸ்திரத்தன்மை, செழிப்புக்கான நீண்டகால வெளிப்படைத்தன்மையின் முக்கியத்தும் குறித்து இருவரும் பேசினர் என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் மோர்கன் ஓர்டகஸ் தெரிவித்தார்.

# மலேசியாவிலிருந்து 150 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி காரணமாக மலேசியாவில் சிக்கித் தவித்த 150 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமாத்தின் ஊடாக அவர்கள் இன்று காலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் விமான நிலையத்திற்கு அண்மையில் உள்ள ஹோட்டல்களில் அவர்களைத் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளது அரசு!

## திஸ்ஸ பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 30

மிலேனியம் சவால் ஒப்பந்தம் தொடர்பில் என்ன நிலைப்பாடு என்பதை நாட்டு மக்களுக்கு அரசு தெரியப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தினார்.

அரசு ஒப்பந்தத்தைக் காண்பித்து தேர்தல் சூதாட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற் கண்டவாறு கூறிய அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தில் தங்களது ஆட்சியில் எம்.சி.சி. ஒப்பந்தத்தை நிராகரிப்பதாக அரச தரப்பினர் தெரிவித்திருந்தார்கள். ஆட்சிக்கு வந்ததும் ஒப்பந்தத்தை ஆராய்ந்து பார்ப்பதற்காகக் குழுவொன்றை நியமித்திருந்தனர்.

அந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பட்டுள்ளது என அறிவித்த இவர்கள், கடந்த அரசு ஒப்பந்தத்தை இரு கட்டங்களாகக் கைச்சாத்திட்டுள்ளது எனவும், அதற்காக அமெரிக்க நிதி வழங்கியுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அமெரிக்கத் தூதரகம் தாங்கள் இவ்வாறு எந்தவொரு நிதியையும் ஒப்பந்தம் தொடர்பில் பெற்றுக்கொடுக்கவில்லை என்று அறிவித்துள்ளது. அப்படியென்றால் பொதுத் தேர்தலை இலக்குவைத்துத்தான் இவர்கள் இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்த முயற்சிக்கின்றார்களா?

எம்.சி.சி. ஒப்பந்தத்தில் நாட்டுக்கு சிக்கல்களைத் தோற்றுவிக்கும் ஏற்பாடுகள் இருக்கின்றன என ஆளும்தரப்பினரே தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில், அரசு ஒப்பந்தத்தைக் காண்பித்து தேர்தல் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. இந்தச் செயற்பாடுகளை உடனே தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நாட்டுக்கு சிக்கலை ஏற்படுத்தும் இத்தகைய ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடப் போகின்றார்களா? அல்லது நிராகரிக்கப் போகின்றார்களா? என்பதை அரசு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2020 இல் வெளியிடப்பெற்றது.